வியாபாரிகளே
உங்களுக்குத்தேவையான
★ அழகு சாதன பொருள்கள்
★ தையல் பொருள்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

★ எவர்சில்வர்
★ விளையாட்டுப் பொருள்கள்
★ பிளாஸ்டிக் பொருள்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 05 சனிக்கிழமை (22 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 330

# இரண்டாம் கட்டப் பேச்சை உறுதிப்படுத்தி

# தலைவர் பிரபாவுக்கு பிரதமர் சந்திரிகா கடிதம்





## சாகரவர்த்தனா கப்டன் குடும்பத்துக்குக் கடிதம்

### பாதுகாப்பாக இருக்கிறாராம்

கொழும்பு, ஒக். 22

''சாகரவர்த்தனா'' கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவத்தில் விடுதலைப் புலிகளால் சிறைப் பிடிக்கப்பட்ட அந்தக் கப்பலின் கப்டன் அஜித் போயகொட செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலமாக தனது மனைவிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக பி.பி.ஸி. சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

தாம் பிரச்சினைகள் எதுவும் இன்றிப் பாதுகாப்பாக இருப்பதாக அவர் தனக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாக அவரது மனைவியான சாந்தனி போயகொட தெரிவித்துள்ளார்.

தனது கணவரை விரைவில் விடுதலை செய்யுமாறு விடுதலைப் புலிகளிடமும், அரசிடமும் அவர் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமது சார்பிலும் தமது பிள்ளைகள் மூவரின் சார்பிலும் தாம் இந்தக் கோரிக்கையை விடுத்திருப்பதாகவும் —

கல்லூரிப் பரிசளிப்பு விழாவுக்கும், பிறந்த நாளுக்கும் தமது தந்தையார் இல்லாமையால் பிள்ளைகள் கவலையடைந்துள்ளனர் என்றும் அவர் கூறியதாக பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது.

(இ-ஐ-6)

### இந்தியப் படையினரால்

## கொல்லப்பட்ட 21 பேருக்கும் ஆஸ்பத்திரியில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ். ஆஸ்பத்திரிக்குள் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட டாக்டர்கள், தாதியர்கள், ஊழியர்கள் உட்பட 21 பேரின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று நடைபெற்றன.

படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் ஆஸ்பத்திரி ஊழியர்கள் உட்படப் பலர் அந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

ஆஸ்பத்திரி எக்ஸ்றே பிரிவில் 21 பேரினதும் உருவப் படங்கள் வைக்கப்பட்டு தீபங்கள் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செய்யப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளர் செல்வி. நலமகள் கனகரத்தினம் உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்தார்.

அஞ்சலியைத் தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது. ஊழியர்கள் பலர் அதில் உரையாற்றினர். ஆஸ்பத்திரி வளாகத்தில் உள்ள வைரவர் கோயிலிலும், கிறிஸ்தவ தேவாலயத்திலும் மரணித்தவர்களின் நினைவாக விசேட பூசை ஆராதனைகள் இடம் பெற்றன.

நினைவு நாளை ஒட்டி ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்கள் அனைவரும் நேற்றுக் கறுப்புப் பட்டி அணிந்திருந்தனர். நினைவு நாள் இன்றும் அனுஷ்டிக்கப்படும்.

(ஐ-15-17)

## கடற் கரும் புலிகளின் நினைவு தினம் மன்னாரில்

மன்னார், ஒக். 22

கற்பிட்டிக்கடலில் ஸ்ரீலங்கா கடற்படையின் சாகரவர்த்தனா கப்பல் தகர்ப்பில் வீரச்சாவைத் தழுவிய கடற்கரும்புலிகளின் நினைவுக் கூட்டம் மன்னார் இலுப்பைக்கடவையில் நடைபெற்றது.

சாகரவர்த்தனா கப்பலின் மாதிரி ஊர்தி பூநகரி நல்லூரில் இருந்து ஊர்வலமாக இலுப்பைக் கடவைக்கு கொண்டு வரப்பட்டபின்னர் நினைவுக் கூட்டம் ஆரம்பமானது.

இதில் ஈகைச் சுடரை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் தளபதி சுதர்சன் ஏற்றினார்.

கரும்புலிகளின் உருவப் படங்களுக்கு கடற்புலிகளின் மகளிர் அமைப்பின் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அருந்ததி, மன்னார் மாவட்ட தளபதி லக்ஷ்மன், மன்னார் மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் நிக்ஷன் ஆகியோர் மலர் மாலைகளை அணிவித்தனர்.

தொடர்ந்து மன்னார் மாவட்டத் தளபதி லக்ஷ்மன், கடற்புலிகள் நிர்வாக சேவைப் பொறுப்பாளர் மறவன் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## அரசதரப்புக்குழு திங்கள் காலையில் ஹெலியில் யாழ்ப்பாணம் வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 22

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டாம்கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்காக —

அரசாங்கத்தின் பிரதிநிதிகள் நால்வரும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள் — என்பதை உறுதிப்படுத்தி பிரதமர் சந்திரிகா குமாரதுங்க தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

பிரதமரின் கடிதம், செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் ஊடாக நேற்று மாலை கையளிக்கப்பட்டது.

முதற்கட்டப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றிய, பிரதமரின் செயலாளர் திரு. பாலபட்டபெண்டியின் தலைமையில் நால்வர் குழுவே இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளிலும் பங்குபற்ற இருக்கிறது.

அரசாங்கப் பிரதிநிதிகள் குழுவினர் திங்கட்கிழமை காலை கொழும்பிலிருந்து விமானத்தில் புறப்பட்டு, பலாலி வந்து சேர்ந்து அங்கிருந்து ஹெலி மூலம் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் வந்திறங்குவர்.

பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு அன்று மாலையே கொழும்பு திரும்புவார்கள்.

அரசாங்கப் பிரதிநிதிகள் இம்முறை பேச்சுவார்த்தைக்கான, திட்டமிட்ட முறையில் அமைந்த நிகழ்ச்சி நிரல் ஒன்றுடனேயே வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## 30 பேர் அடங்கிய செய்தியாளர் குழு

### திங்களன்று யாழ். வரத் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 22

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த செய்தியாளர்கள் 30 பேர் அடங்கிய குழு ஒன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

கொழும்பில் இருந்து நாளை விமானம் மூலம் பலாலிக்கு வரும் இவர்கள் நாளை மறுதினம் அங்கிருந்து பருத்தித்துறையூடாக யாழ். வர ஏற்பாடாகியிருப்பதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும், அரச பிரதிநிதிகளுக்கும் இடையே நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காகவே செய்தியாளர் குழு இங்கு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை வரும் செய்தியாளர் குழுவில் பி.பி.ஸியின்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவேற்று ஜனாதிபதி முறை அடுத்த ஜூலை 15 இல் ஒழிக்கப்பட்டு விடும்

### நிஹால் கலபதியின் கோரிக்கைக்கு சந்திரிகா பதில்

கொழும்பு, ஒக். 22

அடுத்த ஆண்டு ஜூலை 15 ஆம் திகதியளவில் நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும்.

பிரதமரும் ஜனாதிபதி வேட்பாளருமான சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் முறையாக உறுதியளிப்பாராயின் தாம் போட்டியில் இருந்து விலகிக் கொள்ளத் தயாராக இருப்பதாக இலங்கை முற்போக்கு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் திரு. நிஹால் கலபதி விசேட அறிக்கை ஒன்றின் மூலம் கூறியிருந்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே பிரதமர் சந்திரிகா முன்கண்டவாறு தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பமாகி உள்ளன.

இந்த ஜனாதிபதி முறைக்கான எதிர்ப்பை நாங்கள் தெளிவாகத் தெரிவித்துள்ளோம் என்று ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா மேலும் தெரிவித்தார்.

(இ-ஐ)

## ரூபவாஹினித் தலைவர் வசந்தராஜா மற்றும் விக்ரர் ஐவன் வருகிறார்கள்

யாழ்ப்பாணம், ஒக். 22

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு. வசந்தராஜா, ''ராவய'' சிங்கள பத்திரிகை ஆசிரியர் திரு. விக்ரர் ஐவன் ஆகியோர் நாளை மறுதினம் திங்களன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும், அரச பிரதிநிதிகளுக்கும் இடையே யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுக்களை ஒட்டி இவர்களது யாழ். விஜயம் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமானம் மூலம் பலாலிக்கு வரும் இவர்கள் அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து சேருவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை— இவர்களுடன் யாழ். வரவுள்ள செய்தியாளர்கள் குழுவில் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றைச் சேர்ந்த சிலரும் அடங்குவர்.

(இ-ஐ-4)

## போர் நிறுத்தம் ஏற்பட்டால் கிழக்கு புலிகளின் முழுகட்டுப்பாட்டில் வருமாம்

### ராணுவ அதிகாரியின் அச்சம் குறித்து சண்டேரைம்ஸ்

கொழும்பு, ஒக். 22

வடக்கு — கிழக்கில் போர் நிறுத்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டால் ஸ்ரீலங்காப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தை விடுதலைப் புலிகள் மீண்டும் தமது அரசியல் செயற்பாடுகளினால் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவர்.

இவ்வாறு சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக சண்டே ரைம்ஸின் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்திருக்கிறார்.

''போர் நிறுத்தத்துக்கு சம்மதித்தால் கிழக்கு மாகாணத்தை விடுதலைப் புலிகளிடம் நாமே கொடுத்தவர்களாகி விடுவோம்.

''இந்த பிரதேசத்தை விடுவிக்க நாம் பெரிய விலை கொடுத்துள்ளோம்.

இதனாலேயே நாம் போர் நிறுத்தத்தை விரும்பவில்லை.

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை விரும்புவதற்கு இதுவே காரணமாகின்றது.

அரசு பேச்சுவார்த்தையை இழுத்தடிக்கும் என்றே விடுதலைப் புலிகள் நம்புகின்றார்கள்.

அதனால் போர் நிறுத்தம் ஏற்பட்டால் இப்பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் அரசியல் பிரசாரம் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.''

— இவ்வாறு சிரேஷ்ட இராணுவ அதிகாரி தெரிவித்தார் என்று சண்டே ரைம்ஸில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## தனி அமைச்சுக் கேட்டு அரசுக்கு தொல்லை கொடுக்க வேண்டாம்

### முஸ்லிம் காங்கிரஸிடம் மகாநாயக்க தேரர் கோரிக்கை

கொழும்பு, ஒக். 22

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணுவதில் அரசு மும்முரமாக ஈடுபட்டிருக்கும் வேளையில், முஸ்லிம் காங்கிரஸ் [illegible] ரத்துக்கு தனி அமைச்சுக் கேட்டு தொல்லை கொடுக்க வேண்டாம்.

அஸ்கிரிய மகாநாயக்க தேரர் புலிபான சந்தானந்த [illegible] வின் தலைமைப் பீடத்தை [illegible] கேட்டுக் கிறார்.

நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுக்க வேண்டாம் என்றும் அவர் கோரியுள்ளார்.

(இ-எ)

### அராலிக் கடலில்

## காணாமற்போன இருவரும் இறந்ததாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 22

கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தவேளை இடம்பெற்ற கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது காணாமற்போன இருவரும் இறந்து விட்டனர் என்று தற்போது தெரியவந்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 8 ஆம் திகதி அதிகாலை அராலிக் கடற்பிராந்தியத்தில் தொழிற் செய்யச்சென்ற நாகமணி தியாகராசா (வயது 56), அவர் மகன் தியாகராசா தியகுமார் (வயது 22) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

ஊர்காவற்துறை, தம்பாட்டியில் இருந்து இடம்பெயர்ந்து நவாலி அகதி முகாமில் இவர்கள் வசித்து வந்தனர்.

இவர்கள் காணாமற்போனதைஅடுத்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஒக். 22

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(ஐ-4)

## லெப். கேணல் சந்தோஷம் உருவப்படம் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 22

லெப்ரினன்ட்கேணல் சந்தோஷத்தின் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி அவரது உருவப்படம் நேற்று தாவடியில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

அவரின் உருவப்படத்துடன் லெப்ரினன்ட் கேணல் புலேந்திரன், லெப்ரினன்ட் கேணல் பொன்னம்மான் ஆகியோரின் உருவப்படங்களும் திரைநீக்கம் செய்யப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பார்த்தீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை தொடர்பகப் பொறுப்பாளர் திரு. மூர்த்தி, லெப்ரினன்ட் கேணல் சந்தோஷம் அவர்களின் சகோதரன் திரு. புதியவன் ஆகியோர் ஈகைச்சுடர் ஏற்றினர். உருவப்படத்தை லெப்ரினன்ட் கேணல் சந்தோஷம் மாஸ்ரரின் தந்தை திரைநீக்கம் செய்ய படத்துக்கு அவரின் தாயார் மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து உருவப்படத்துக்கு போராளிகளும், மக்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஏழு வாரங்கள் நிரம்பிய உயர் ரக கறுப்பு நிற ஆண் ஜேர்மன் ஷெப்பேர்ட் நாய்க் குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: S. V. குருபாதம் இல. 57, புங்கன்குளம், ரயில் றோட் (புங்கன்குளம், ஸ்டேசன் முன்னால்), அரியாலை. (33460)

இல. 455, ஸ்ரான்லி வீதியில், யாழ். மத்திய பஸ் நிலைய முன்பாக மூன்று அறைகளுடைய கடையும், கிணறு, மலசலகூடமுடைய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 55/3, அம்பலவாணர் வீதி, அத்தியடி. (33430)

பிறிமா புறொயிலர் குஞ்சுகள், சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், நன்கு உக்கிய கோழி எரு விற்பனைக்குண்டு. சி. குலசிங்கம், இல. 9, றக்கா வீதி (Barக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (33453)

கேர்(F)போம் பிறசியர்ஸ், சில்வர் சீல்ட் சொக்ஸ் வகைகள், பெனியன்கள், நூல் எலாஸ்டிக் வகைகள், யட்டிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சிறிமுருகன், 303, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். (33334)

சிவம் தீபாவளி வாழ்த்து மடல் மற்றும் St. Micheal தீபாவளி நியூகலா வாழ்த்து மடல் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள ஸ்ரீகாந் புத்தகசாலை, யாழ்ப்பாணம். மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-9504)

நல்ல நிலையிலுள்ள M. D. 90 கொண்டா மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: க. ஜெகதீஸ்வரன், 62, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (33442)

பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 121, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். (33451)

ஒரு மாதம் நிரம்பிய வெள்ளைநிற பொமனேரியன் நாய்க்குட்டிகளும், அழகிய Lioncut குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 123, பருத்தித்துறை வீதி (இந்து விடுதி முன்பாக), நல்லூர், யாழ்ப்பாணம். (33439)

பொமனேரியன் நாய்க்குட்டிகள் (வெள்ளை பூச்சி நீக்கியவை), புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 392, பிரதான வீதி (பஸ்தியன் சந்தி), யாழ்ப்பாணம். (33454)

### விற்பனைக்கு

அடை வைக்கக் கூடிய நல்ல இன கோழி முட்டைகள், வான்கோழி, பண்டம் முட்டைகள் எப்பொழுதும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33456)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், சேவல்கள், பேட்டுக் கோழிகள் விற்பனைக்குண்டு. இல:07, நிக்கலஸ் ஒழுங்கை, கச்சேரி-நல்லூர் வீதி, கண்டிக்குளி. (33455)

பிறாமா, சில்க்கி, இனி போன்ற கோழி வகைகள் எம்மிடம் விற்பனைக்குண்டு. ஏ. ராஜன், இல. 86/3, புங்கன்குளம், புகையிரத நிலைய முன்பாக, அரியாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். (33452)

### இறைச்சிக்கோழிவிற்பனை

Broiler கோழிகள் தினமும் காலை 7-00 தொடக்கம் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். [33458]

### கோழிக்குஞ்சு விநியோகம்

நாலு கிழமைகள் நிரம்பிய Hyline Brown சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். [33457]

ஐந்து நாட்கள் வளர்ச்சியடைந்த பிறிமா புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. குஞ்சு ஒன்று ரூபா 42/50 உடுவில் மகளிர் கல்லூரி முன், மல்வம் வீதியூடாக சிங்கம் லேன், உடுவில். (33434)

### வாழ்த்து மடல்கள்

பிறந்த நாள், திருமண நாள் வாழ்த்துமடல்களையும், தீபாவளி வாழ்த்துக்களையும் விசேட கழிவில் தெரிவு செய்திட இன்றே வாரீர் "ஆனந்த்ஸ்" புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33387)

### கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல, ஓடும் நிலையிலுள்ள ஒக்ஸ்போர்ட் கார் பற்றறியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு இல.48/1, முதலாம் ஒழுங்கை(ஐங்கரன் விளையாட்டுக் கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி/9422]

### மணமகள் தேவை

இந்து, 31 வயது, உத்தரம் 1, உதயத்து செவ்வாய் Londonஇல் Computer Hard ware முடித்துவிட்டு நிரந்தர விசாவுடன், நிரந்தர உத்தியோகத்தில் உள்ளவருக்கு அழகான, படித்த, உயரம் குறைந்த 1966 — 1970 இடையில் பிறந்த பெண் தேவை. திருமணம் இலங்கையில் செய்து விசாவுடன் அழைத்துச் செல்லப்படுவர். இல. 709, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33459)

### மிருதங்கம்

புதிய மிருதங்கங்கள் மற்றும் மிருதங்கம், தபெலா, டோல்கி போன்றவற்றுக்குச் சிறந்த முறையில் மூட்டுப் போடுதல் ஆகியவற்றுக்கு நாடுங்கள், மிருதங்கத் தொழில்நுட்ப வியலாளர்; க. இராசநாயகம் 82/16, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு, அரியாலை. (33401)

### திருமண சேவை

எம்மிடம் உள்நாடு, வெளிநாடு மணமக்கள் சகல உத்தியோகத்தர்கள் உண்டு. சிறந்த முறையில் பொருத்தம் செய்து தரப்படும். அவரவர் மதத்திற்கேற்ப, தொடர்பு முழு விவரத்துடனும், புகைப்படத்துடனும் தேவை, திருமுருகன் திருமண சேவை, கோப்பாய்— மானிப்பாய், வீதி, கைதடி. A P.C அருகில், (33443)

### மணப்பெண் தேவை

இந்து 23-02-1964 திருவாதிரை 1ஆம் பாதம் 4இல்செவ்வாய் உள்ள சுவிற்சர்லாந்தில் வேலை செய்யும் மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. திருமணம் இலங்கையில் செய்யலாம். முழு விவரங்களுடனும், ஜாதகத்துடனும் தொடர்பு கொள்ளவும். இல. 708, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (33435)

### தவறிவிட்டது

292820186V, 731552231V இலக்க அடையாள அட்டைகளும், போக்குவரத்து அனுமதிப்பத்திரமும் 15-10-94 இல் கௌாலி-நல்லூரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல:772 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். (33437)

### மணிக்கூடுகள்

புதிய கடிகாரங்கள் வாங்குபவர்களுக்கு மட்டும் அவர்களின் பாவித்த கடிகாரங்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். மணிக்கூடுகள், றேடியோக்கள் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி றோட் (வானவில் அருகில்), கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி, மானிப்பாய்வீதி, ஆனைக்கோட்டை. (சி-9514)

### மணமகள் தேவை

27 வயது, உத்திரட்டாதி நட்சத்திரம் உடைய ஜேர்மன் விசாவுள்ள இங்குள்ள மணமகனுக்கு மணப்பெண் தேவை. முழுவிவரங்களுடனும் விண்ணப்பிக்கவும். இல. 37, மே/பா உதயன், 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (7672)

## அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான பழுதடைந்த நிலையில் இருக்கும் வாகனங்களைத் திருத்துவதற்கான வாகன உதிரிப்பாகங்களை இங்கு எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. (ஒ-4)

---

உ

## விவாஹ சுபமுகூர்த்தம்

அன்புடையீர்!
நிகழும் மங்களம்மிகு பவ வருடம் ஐப்பசி மாதம் 7ஆம் நாள் (24 - 10 - 1994)
திங்கட்கிழமை காலை 10-00 மணி முதல் 11-15 மணி வரையுள்ள
மிருகசீரிட நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும்
தனு லக்கினமும் சூரிய ஓரையும்
கூடிய சுப வேளையில்,

வல்வெட்டித்துறை
சிவன்கோயில் குரு
ச. ஜோதீஸ்காமக் குருக்கள்
தம்பதிகளின் புத்திரன்
திருநிறை செல்வன்
**ஸ்ரீ சிவநாதசர்மா**
அவர்கட்கு

தம்பலகாமம் ஆதிகோண
நாயகர் கோயில் குரு
ந. நாகேஸ்வரக் குருக்கள்
தம்பதிகளின் புத்திரி
திருவளர் செல்வி
**அனுசுயா**
அவர்களை

கன்னிகாதான, பாணிக்கிரகண திருமாங்கல்ய தாரணம் செய்ய
இறையருள் துணைகொண்டு பெரியவர்கள் நிச்சயித்திருப்பதால்,
அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து,
தம்பதிகளை ஆசீர்வதித்தேகும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் கோயில் வீதி,
கல்வியங்காடு, திருநெல்வேலி.
சமாவர்த்தனம்: காலை 6-00 மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும் ★

சிவஸ்ரீ ச. ஜோதிஸ்காமக் குருக்கள்
தம்பதிகள்,
முருகன் கோயில்,
நெல்லியடி.

சிவஸ்ரீ ந. நாகேஸ்வரக் குருக்கள்
தம்பதிகள்,
மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

★ இரு வீட்டார் அழைப்பு ★

(33450)

---

# G. S. லிங்கநாதன் அன் கோ

மலரும் தீபாவளியை மங்களமாய் கொண்டாட
மனநிறைவோடு அழைக்கின்றோம்.
கண்ணைக்கவரும் வகையில்
புத்தம் புதிய புடைவை தினுசுகள்

- ✶ காஞ்சிபுரம், வர்ணாசி, பெனாரிஸ், மீனா சற்றின்
- ✶ மைசூர் சில்க், டெஷ்மீர் சில்க், ஹைதராபாத் சில்க், ட்றோ சில்க்
- ✶ பூணம் சாறி, மைக்குறோ ஷிபொன், எயர் போட், சூரத் சில்க், அப்பிள் சில்க்
- ✶ பிரியங்கா கொட்டன், பெங்கால் கொட்டன், காஞ்சி கொட்டன், சுங்குடி கொட்டன்
- ✶ பட்டுவேட்டி, சேட்டிங், சூட்டிங் சிறுவர் சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்

அனைத்தையும் தெரிவுசெய்து கொள்ள
இன்றே நாடுங்கள்

# ச. லிங்கநாதன் வண்ணச்சோலை

13 — 14 (பெரியகடை வீதி)
சோதியா தெரு யாழ்ப்பாணம்.
(33396)

---

பார்த்தவர்கள் பாராட்டுகிறார்கள்
குடும்பத்துடன் பார்த்து மகிழ

★ நெல்லியடி மகாத்மா,
✶ சாவகச்சேரி தெய்வேந்திரா
ஆகிய திரையரங்குகளில்
அகன்ற வெண்திரையில்

நிதர்சனமும்,
கலை, பண்பாட்டுக்கழகமும்
இணைந்து உருவாக்கிய

## திரு. பொ. தாசனின்

# "இன்னும் ஒரு நாடு"

தினசரி 6-30 மணி
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30மணி
[சி-9342]

---

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## AL 95 கலை, வர்த்தகம்

## DAY CLASS

பிரிவு II

ஆரம்பம்: **25 - 10 - 94**
செவ். 8-00 **A M**

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளலாம்
★ பிரிவு I க்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
(சி/9411)

---

# தீபாவளி

## வாழ்த்து மடல்கள்

நவீன டிசைன்களில் தீபாவளி வாழ்த்து மடல்கள்
வெளிவந்து விற்பனையாகின்றன
பல அளவுகளிலும் பற்பல டிசைன்களிலும்
உருவானவைகள்

✶ வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு

**No—1 போஸ்காட் 100 இன் விலை 90/-**

வியாபாரிகளே
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்:
**பூபாலசிங்கம் புத்தக நிலையம்,**
யாழ்ப்பாணம்.
[சி-9519]

---

வரதர் எழுதிய நாளை

# பாரதக் கதை

## வெளியீட்டு விழா

23-10-1994 ஞாயிறு காலை 9 மணிக்கு
நாவலர் கலாசார மண்டபத்தில்
வருகைதந்து சிறப்பியுங்கள்.
(சி/9421)

---

## கிளைக்குழுத் தேர்தல் 23 - 10 - 1994

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கிளைக்குழுத் தேர்தல் எதிர்வரும் **23 — 10 — 1994** ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 11-00 மணியளவில் நடைபெறும். இத் தேர்தல் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. சபாரத்தினம் தலைமையிலும் தேர்தல் உத்தியோகத்தர் திரு. ந. யோகேந்திரராசா அவர்களின் வழி நடத்தலிலும் நடைபெறுமென சங்கப் பொது முகாமையாளர் திரு. தி. பொ. ஜேசுராசா தெரிவிக்கின்றார்.

நன்றி.

இங்ஙனம்,
கூட்டுறவு சேவையிலுள்ள,
பொது முகாமையாளர்.

(சி-9521)

---

## 2ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

### பொன்னுத்துரை குணரட்ணம்
லெப். இசைவாணன்
(மீரான்)

கண்ணன் என்னும் நாமம் கொண்டு - எம்
கண்ணின் மணியாய் உதித்தவனே
கள்ளம் கபடமிலா உன்னைக் காலன்
கவர்ந்து சென்றதும் ஏனோ?

ஆனையிறவினில் ஆடிய சமரினில்
ஆவி தனை இழந்த உனை
ஆவலாய் தேடுகின்றோம்
ஆர் எமக்கு பதில் சொல்வார்.

இந்தியனை வெளியேற்ற 89இல்
இல்லம் விட்டு நீ பிரிந்தாய்
இழந்தோம் நாம் அமைதியை அன்றே
இன்நாள் வரையிலும் தவிக்கின்றோம்.

மீரான் என நீ புதிதாய் பிறந்தாய்
மீண்டும் எம் அருகினில் வந்தாய்
மீட்டிடுவோம் தமிழீழம் தனையென்று
மீளாத் துயரிலெமை ஆழ்த்தி விட்டாய்.

இசை வாணனெனும் இனிய நாமம் கொண்டவனே
இதயம் கவர நீ இசைத்திடும் பாடல்களோ
இறவாமல் இருக்கும் போது நீ
இறைவனடி இணைந்த தேனோ.

ஈராண்டு உனை நாம் இழந்து என்றால்
ஈட்டிகள் இதய மதில் பாய்வது போலுள்ளதே
ஈழத்தாய் உனை தன் மடிமீது துயில வைத்து
ஈரமுத்தம் சிந்தி உனை வாழ்த்தி விட்டாள்.

ஏங்கின்றதே எம்மிதயம் உன் அன்புக்காய்
வேகின்றதே எம்மிதயம் உன் பிரிவினுக்காய்
நோகின்றதே எம்மிதயம் உன் மறைவினுக்காய்
தவிர்க்கின்றதே எம்மிதயம் உனைக் காண்பதற்காய்.

மண்ணாளப் பிறந்தவனே கண்ணா
விண்ணாள ஆசையால விரைந்து சென்றாய்
உன்னை எண்ணி நாம் வாட எண்ணித்தானோ
விண்ணுலகம் சென்று நீயும் மறைந்துகொண்டாய்.

விடிகின்ற பொழுதினில் நீயாய்
வெண்ணிலா தன்னிலும் உன்முகம் தானாய்
உதிக்கும் சூரியனின் உதயமே உன்வரவாய்
உனை நோக்கி இருக்கின்றோம் கண்ணா.

அப்பா, அம்மா, சகோதரர்கள்.

5ஆம், குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (33436)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 07 — 06 — 1987



உதிர்வு: 22 — 10 — 1990

### அமரர் ச. அட்சயன்

நெஞ்சை விட்டகலாத நினைவுகளுடன் வாழும்;
அப்பா, அம்மா, அண்ணா,
தம்பி, உற்றார், உறவினர்.

நா. சத்தியநாதன்
கைதடி மேற்கு,
கைதடி. (33431)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சந்திரிகாவுக்கு ஒரு பரீட்சை

இன்னும் இரண்டு வாரங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருக்கிறது. மீண்டும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்வதற்காகவே இந்தத் தேர்தல் நடக்கிறது.

இந்தத் தேர்தலில் போட்டி, அரசாங்கக் கட்சி வேட்பாளர் சந்திரிகாவுக்கும் எதிர்க்கட்சி வேட்பாளர் காமினி திசநாயக்காவுக்கும் இடையே தான் என்பது தெரிந்த விடயமே. இருவருமே, தாமே வெற்றிவாகை சூடப்போவதாகக் கூறிக்கொள்கிறார்கள். பதவிக்கு வந்தால் என்னென்ன செயற்பாடுகளில் இறங்குவது என்று பட்டியல் போட்டு பிரசாரக் கூட்டங்களில் பேசுகிறார்கள்.

சந்திரிகாவினதும், காமினியினதும் இந்தத் தேர்தல் பிரசாரச் சந்தடிக்கு மத்தியில், மூன்றாவது ஜனாதிபதி வேட்பாளரான ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியைச் சேர்ந்த நிகால் கலபதி தேர்தல் சீட்டு ஒன்றைத் தூக்கிப் போட்டுள்ளார். இவர் தென்னிலங்கையில் தீவிரவாதக் குழுவான ஜே.வி.பியின் அரசியல் கட்சி வேட்பாளராவார்.

அரசாங்கக் கட்சி வேட்பாளரான சந்திரிகா குமாரதுங்கா, இம்மாதம் 25 ஆம் திகதிக்குள், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு, பொறுப்பு வாய்ந்த திரந்தரமான வாக்குறுதியைத் தந்தால், தாம் தேர்தலில் இருந்து விலகுவதாக அவர் அறிவித்திருக்கிறார்.

ஜே. வி. பி இப்போது வெளிப்படையாக இயங்காவிடினும் மறைமுகமாக அதற்கென்று ஆதரவாளர்கள் உள்ளனர். நிகால் கலபதி போட்டியிலிருந்து விலகினால் சந்திரிகாவின் வாக்குப் பலம் அதிகரிக்கும். ஜே.வி.பி ஆதரவாளர்களின் — முற்போக்குச் சிந்தனை உள்ள சிங்கள இளைஞர்களின் — வாக்குகள் சந்திரிகாவுக்கே கிடைக்கும். எனவே நிகால் கலபதியின் தேர்தல் சீட்டை சந்திரிகா கவனத்தில் எடுக்காமல் இருக்க முடியாது.

பிரதமர் சந்திரிகா, அரசாங்கப் படைகளை கடுமையாக விமர்சித்ததினால் எழுந்துள்ள அவருக்குப் பாதகமான சூழ்நிலையை — வாக்கு இழப்பை — சரிசெய்வதற்கு கலபதியின் வாக்குகள் பெரிதும் உதவும். புதைகுழி விவகாரங்களில் படையினர் சம்பந்தப்பட்டது வெளிச்சத்துக்கு வருவதால், அந்தத் தரப்பினருக்கு சந்திரிகா மீது கோபம் ஏற்பட்டுள்ளது. அதனைத் தக்கவாறு பயன்படுத்துவதில் காமினி மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

அரசாங்கப் படைகளை அவமதிக்கும் வகையில் அரசு நடந்து கொள்வதாகவும், அதனால் முப்படைகளினதும், பொலீஸ் பகுதியினதும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களைத் தமக்கே வாக்களிக்குமாறும் கோரும் கடிதங்களை காமினி அனுப்பி வைத்திருக்கிறார். இத்தகைய ஒரு சூழ்நிலையில், தாமாகத் தேடிவரும் கலபதியின் வாக்குகளை சந்திரிகா புறக்கணித்து விட முடியாது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது என்பது சந்திரிகாவின் பொதுத் தேர்தலுக்கான பிரதான வாக்குறுதிகளில் ஒன்றாக இருந்தது. ஆயினும் நாடாளுமன்றத் தேர்தலில் பொ. ம. ஐ. முன்னணிக்கு போதிய தனிப் பலம் கிடைக்காததால், ஜனாதிபதிப் பதவி மூலம் ஆட்சி பலத்தை அதிகரிக்க வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டது. எனினும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது என்ற கொள்கையைத் தாம் இன்னும் கைவிடவில்லை என்றே அவர் கூறி வருகிறார்.

ஆகையால், நிகால் கலபதியின் சீட்டுக்குப் பதில் சீட்டுப் போட்டு வாக்குத் தேடுவது சந்திரிகாவுக்கு ஒன்றும் கடினமானதல்ல. அவரின் பதில் சீட்டு நேற்றுப் போடப்பட்டு விட்டது. பதில் சீட்டு போடத் தயங்கியிருப்பின் அவரது கொள்கைப் பிடிப்பிலும், செயல் திறனிலும் மக்கள் நம்பிக்கை இழந்திருப்பர். ஆனால் சந்திரிகா இந்தப் பரீட்சையில் சித்தி அடைவார் என நம்பலாம்.

# ரஷ்ய ஆயுத கொள்வனவு உடன்பாட்டை இலங்கை அரசு ரத்துச் செய்து விட்டது!

கொழும்பு, ஒக். 22
ரஷ்யாவில் இருந்து 72லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்யக் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையை இலங்கை அரசு ரத்துச் செய்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

200 கவச வாகனங்கள், இரண்டு கடற்படை அதிவேக படகுகள், மூன்று போக்குவரத்து விமானங்கள் உட்பட பல ரக ஆயுதங்களை கொள்வனவு செய்ய முந்திய ஐ.தே.க. அரசு ரஷ்ய ஆயுத நிறுவனம் ஒன்றுடன் இந்த உடன்படிக்கையைச் செய்து கொண்டது.

சந்திரிகா அரசு பதவிக்கு வந்ததும் இந்த உடன்படிக்கையை அமுல் நடத்துவது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தற்போது இக்கொள்வனவு கைவிடப்பட்டிருப்பதாக 'த ஐலண்ட்' நேற்று செய்தி வெளியிட்டது. (ஒ-எ)

## யாழ். மாவட்ட பாடசாலைகளை திருத்த ரூபா 20 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் திருத்த வேலைகளுக்கென வடக்கு — கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சினால் 20 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வலயம் -1, வலயம் -2 இலும் உள்ள கள் மற்றும் நிரந்தரமாக இருக்கும் பாடசாலைகளிலும் திருத்த வேலைகளுக்கு இந் நிதி பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த பாடசாலைகள், இடம்பெயர்ந்த பாடசாலை
இடம்பெயர்ந்த பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சேதவிப
ரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு அறிக்கையாக்கப்பட்டு வருகின்றன.

தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. சடாச்சர சண்முகதாஸ் மேற்படி பாடசாலைகளில் மாணவர் கல்வி கற்பதில் இருக்கும் குறைகளையும் பாடசாலைகளின் நிலைமைகளையும் நேரில் சென்று பார்வையிட்டு வருகிறார்.

இதன் விபரங்கள் தொகுக்கப்பட்டு பாடசாலைகளை புனரமைப்பதற்கு தேவையான நிதி மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சிடம் கோரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

### பயமுறுத்தல் வருகின்றது; ஆனாலும்
## தமிழருக்கு உரிமைவழங்க நான் தயங்க மாட்டேன்
### மட்டக்களப்பில் சந்திரிகா தெரிவிப்பு

எனக்குப் பயமுறுத்தல்கள் வருகின்றன எனினும் வடக்கு — கிழக்கு பிரச்சினையைத் தீர்த்து தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வழங்குவதற்கு நான் தயங்கமாட்டேன்.

பிரதமர் சத்திரிகா குமாரதுங்க மட்டக்களப்பில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு கூறினார்.

தங்களின் நியாயமான உரிமைகளைக் கோரிய தமிழ் பேசும் மக்கள் மீது ஐ.தே.க. அரசு ஒடுக்குமுறைகளையே பிரயோகித்து வந்தது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-4)

## பூஸா முகாமில் இருக்கும் 40 பேரும் விடுதலையாவர்

கொழும்பு, ஒக். 22
பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கடைசித் தொகுதியான 40 கைதிகளையும் விடுதலை செய்யும்படி நீதி அமைச்சு சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் விடுதலை செய்யப்பட்டவுடன் பூஸா முகாம் மூடப்பட்டுவிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பூஸா முகாமில் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கைது செய்யப்படும் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டு வந்தனர். தென்பகுதியில் ஜே. வி. பி. வன்செயல் காரணமாக கைது செய்யப்பட்டவர்களும் பின்னர் இம்முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர். (ஒ-எ)

## யாழ். கூ.மொ.வி.கிளைக்கு ஊழியரை திரட்ட ஏற்பாடு

இம்மாத இறுதிக்குள் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ள கூ. மொ. வி. கிளையில் பணியாற்றுவதற்குத் தேவையான ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் இயங்கும் உணவு ஆணையாளர் திணைக்களத்தில் பணிபுரியும் ஊழியர்கள் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இக்கிளை நிலையத்துக்குத் தேவையான தளபாடங்களும் பொருள்களும் கொழும்பில் இருந்து அனுப்பிவைக்கப்பட உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## பழ மானிய திட்டத்தின் கீழ் 117 விவசாயிகளுக்கு உதவி

யாழ். மாவட்ட விவசாய திணைக்களம் பழமானிய திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான உதவிகளை வழங்கியுள்ளது.

30 ஏக்கரில் வாழைமரமும், 2½ ஏக்கரில் தேசிக்கன்றுகளும் இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

பழமானிய திட்டத்தை மேற்கொள்வதற்கென ஒரு லட்சத்து 43லட்சம் ரூபாவை, வடக்கு— கிழக்கு மாகாண விவசாயப்பகுதி யாழ். மாவட்ட விவசாய திணைக்களத்துக்கு ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 117 விவசாயிகள் பயனடைவார்கள் என தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

# மாணவர் இசைக்கலையை கற்று மொழியை மேம்படுத்த வேண்டும்

### அரங்கேற்ற நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம், ஒக். 22
மாணவர்கள் தமது கல்வியுடன் இசைக் கலையையும் உரிய முறையில் நிறைவாகக் கற்று மொழியின் தகைமையை மேம்படுத்த வேண்டும்.

செல்வன் குணராஜா நக்கீரனின் கர்நாடக இசை அரங்கேற்றத்தில் பேசிய சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லை ஆதீனத்தில் சங்கீத பூசணம் திரு. எல். திலகநாயகம் போலின் மாணவனான நக்கீரனின் அரங்கேற்றம் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது. விழாவிற்கு கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. இ. மகேந்திரன் தலைமை வகித்தார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் பேசும் போது கூறியதாவது.

சங்ககாலத்தில் இசைக்குச் சிறப்பான இடம் இருந்தது. பின்னர் சங்கம் மருவிய காலத்தில் அதன் வளர்ச்சி குன்றிய போதும் நாயன்மார்கள் காலத்தில் அது மீண்டும் புத்துணர்வு பெற்றது. தமிழோடு இசைபாட மறந்தறியேன் என்று மகிழ்ந்து பாடியவர்கள் நாயன்மார்கள். எமது மண்ணிலும் இசையும் கலையும் இன்று புதுப்பொலிவுடன் வளர்கின்றன.

அந்த வகையில் பதினொரு வருடங்கள் குரு சிஷ்ய பாரம்பரிய முறையில் இசைக்கலையைப் பயின்று திறமையான இசைக்கலைஞனாக மிளிரும் குணராஜா நக்கீரனையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

திரு. மகேந்திரன் தனது தலைமையுரையில் பேசும் போது கூறியதாவது.

பல்துறைசார்ந்த அறிவு மாணவர்களின் எதிர்காலத்தை மட்டுமல்ல கலாசாரம் பண்பாடுகளை வளர்க்கவும் உதவும். பாரம்பரிய கலையான இசையை வேண்டும். கொக்குவில் 'இந்துக் கல்லூரி எமது இசைக் கலைப் பாரம்பரியங்களை வளர்ப்பதில் கணிசமான பங்களிப்பை வழங்குகிறது.

இன்று அரங்கேற்றம் செய்யும் மாணவர் மட்டுமன்றி அவருக்கு அணிசெய் இசைக் கலைஞர்களாக காணப்படுபவர்களும் எமது கல்லூரியின் மாணவர்களாக விளங்கியவர்களே — என்றார்.

பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் தனது மதிப்பீட்டுரையில் கூறியதாவது:

சாஸ்திரிய பூர்வமாக ஒழுங்காக அமைக்கப்பட்ட அரங்கேற்றம் இது. நீண்ட காலத்தின் பின் போற்றத்தக்க ஒரு சிறந்த அரங்கேற்ற நிகழ்ச்சியைக் கேட்டு மெய் மறந்தேன் — என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், திரு என். கே. பத்மநாதன், திரு. இ. ஜெயராஜ், அனுஷ்யந்தன் ஆகியோரும் ... கலைஞர் கௌரவிப்பும் இடம் ... (இ)

## நீரிறைக்கும் யந்திரங்கள் எடுத்துவர நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 22
கொழும்பில் இருந்து கப்பல் மூலம் 300 நீரிறைக்கும் யந்திரங்களை வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சமாசம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

நீரிறைக்கும் யந்திரங்கள் மற்றும் விவசாய உபகரணங்களை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்காக மேற்படி சமாசத்தின் அதிகாரி ஒருவர் கொழும்புக்குச் சென்றுள்ளார். (ஒ-17)

## தொழுநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கை வன்னியிலும்

### கிளிநொச்சியில் 5நாட்கள்

யாழ்ப்பாணம், ஒக். 22
வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் தொழுநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மீண்டும் கிளிநொச்சி மாவட்டத்திலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ். கிளிநொச்சி போக்குவரத்து துண்டிப்பை அடுத்து தடைப்பட்டிருந்த இந்நடவடிக்கைகள் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரையை அடுத்து மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த மாதத்திலிருந்து மாதத்தில் 5 நாட்கள் இதற்கென வடபிராந்திய தொழுநோய் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் திரு. மு. குணரட்ணம் கிளிநொச்சிக்கு சென்று தொழுநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வார் என தெரிவிக்கப்படுகிறது. (ஒ-4)

### யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற
## அபிவிருத்தி சபைதேர்தல் மோசடி பற்றி விசாரிக்குக!
### அமைச்சர் குணரத்ன கோரிக்கை

கொழும்பு, ஒக். 22
1981 இல் நடத்தப்பட்ட யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் தேர்தல் ஒழுங்கீனங்கள் மற்றும் மோசடிகள் தொடர்பாக விசாரணை ஒன்றை நடத்தும்படி பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சி. வி. குணரத்தினாவே இந்த வேண்டுகோளை பிரதமருக்கு விடுத்திருக்கிறார். தேர்தல் தினத்தன்று நுவரெலியாவைச் சேர்ந்த காடையர்கள் கூட்டம் ஒன்றே யாழ்ப்பாணத்தில் தேர்தல் ஒழுங்கீனங்களை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்பட்டது. வாக்களிப்பு முடிந்த கையோடு, அளிக்கப்பட்ட வாக்குகளுடன் ஆறு வாக்குப் பெட்டிகள் ஹோட்டல் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. பின்னர் அப்பெட்டிகள் காணாமற் போனதாக அறிவிக்கப்பட்டது.

இவ்விவரங்களை பிரதமரிடம் அமைச்சர் குணரத்தினா எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஜனநாயகத்தின் அடித்தளத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட முதலாவது பாரதூரமான தாக்குதலாக இத்தேர்தல் ஒழுங்கீனங்கள் அமைந்தன என்று குறிப்பிட்ட அமைச்சர் குணரத்னா, இம்முறை கேடுகள் குறித்து அரசு பூரணமான விசாரணை ஒன்றை நடத்தி, இதற்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று பிரதமரைக் கேட்டுள்ளார். (ஒ-எ)

## புலிகளின் குரல் வானொலியில்

**22 — 10 — 1994**
**சனி இரவு**

★ 8-01 — அறிவியற் கலசம்
★ 8-10 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-25 — நேயர்கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சித்திரம் — ந. கிருஷ்ணா எழுதிய ''புத்துணர்வு''

**23 — 10 — 1994**
**ஞாயிறு காலை**

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15—களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40—களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## பாலர் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 22
விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டுப் பிரிவினர் நடத்தும் அம்பேத்கர் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் சுன்னாகம் எஸ். ரி. எஸ். விளையாட்டு மைதானத்தில் திருமதி ஜெயநாதன் லோகேஸ்வரி தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் திரு.ஆ. மகாலிங்கம் கலந்து கொள்வார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்படும் பூப்பந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி உள்ளக ஆடுகளத்தில் நடைபெறவுள்ளன.

காலை 8.30மணிக்கு மாணவிகளுக்கு இடையிலான ஆட்டங்களும் —

பிற்பகல் 1 மணிக்கு மாணவர்களுக்கு இடையிலான ஆட்டங்களும் இடம்பெறும். (ஐ-20)

## சுதந்திரப் பறவைகள் நாளை வெளி வரும்

யாழ்ப்பாணம், ஒக். 22
விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வமான சுதந்திரப் பறவைகள் பத்திரிகை நாளை ஞாயிறு வெளிவரவுள்ளது. (ஐ)

## இன்று

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ். மாநகராட்சி மன்ற புதிய, பழைய சுகாதாரத் தொண்டர்களுக்கான மாதாந்த பயிற்சிக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 8. 30 முதல் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். (இ-4)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் புகைப்படக்கலை அடிப்படைக்கற்கை நெறியின் தொகுதி 14 இன் ஆரம்ப விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு கலைப்பீடத்தில் இடம்பெறவுள்ளது. (இ)

## மரதன் ஓட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் மாவட்ட தடகள விளையாட்டு விழாவினை ஒட்டி ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டிகள் எதிர்வரும் திங்களன்று காலை 6.30 மணிக்கு கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட அரசியல் துறை செயலகத்துக்கு முன்பாக ஆரம்பமாகும்.

மரதன் ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றும் சகல போட்டியாளர்களையும் அன்று காலை 6 மணிக்கு அங்கு சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு அறிவித்துள்ளது. (ஐ)

## தபால்களை சேர்க்குக

யாழ்ப்பாணம், ஒக். 22
'மாஹேறா' கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூருக்கான தபால்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன எனவே பொதுமக்கள் கடிதங்களை இன்று காலை 8 மணிக்கு முன் யாழ். பிரதம தபாலகத்தில் சேர்க்குமாறு பிரதம தபாலதிபர் திரு. சு. கோமலேஸ்வரன் கேட்டுள்ளார். (ஐ)

## பாலம் இடிந்து விழுந்து 48 பேர் பலி

சோல், ஒக். 22
தென்கொரியாவின் தலைநகரான சோல் நகரில் ஆறு ஒன்றுக்கு மேலாகப் போடப்பட்டிருந்த பாலம் ஒன்று இடிந்து விழுந்ததினால் சம்பவ நேரம் பாலத்தில் பயணம் செய்துகொண்டிருந்தவர்களில் 48 பேர் கொல்லப்பட்டனர்.

பாலத்தில் சென்று கொண்டிருந்த சுமார் பத்து வாகனங்கள் ஆற்றுக்குள் வீழ்ந்தன நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயம் அடைந்துள்ளனர். [இ(

## ஆங்கில மருந்து வணிகர் கழக வைபவம்

யாழ்ப்பாணம், ஒக். 22
வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் கழகத்தினரின் 'மருத்துவம்' இதழ் வெளியீட்டு விழாவும், மருந்தாளர் பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கல் வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

## இரண்டாம் கட்டப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்ச்சி நிரல் கொழும்பில் நேற்று வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யுத்த நிறுத்தம் தொடர்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் சிபார்சுகளை அரசாங்கம் எதிர்பார்க்கும். யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான இணக்கத்திற்கு வருவதற்கு முன்னர் விடுதலைப்புலிகளின் அபிப்பிராயங்களைஅரச பிரதிநிதிகள் பெற்றுக்கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மற்றும் தொலைத்தொடர்பு சேவை, போக்குவரத்து, யாழ். பொதுநூலகம், மின்சார விநியோகம் தொடர்பாக புனர் நிர்மாணம் மற்றும் சில விடயங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப்படும் என அரச பிரதிநிதிகள் கொழும்பில் தெரிவித்துள்ளனர்.

இம்மாதம் 13 14 ஆம் திகதிகளில் நடைபெற்ற முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின்போது ஆராயப்பட்ட அன்றாடப் பிரச்சினைகள் தொடர்புடைய விடயங்கள் குறித்தும் —

விடுதலைப் புலிகள் வலியுறுத்திய விடயங்களான. போக்குவரத்துப் பாதையை திறந்து விடுதல், போர் நிறுத்தம் என்பன குறித்தும் —

அரசாங்கத்தின் நிலைப்பாடு நடவடிக்கைகள் குறித்து திங்கட்கிழமைப் பேச்சின் போது தெரிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே விடுதலைப் புலிகளுடனான முதலாம் கட்டப் பேச்சுக்களின் கூட்டறிக்கை கொழும்பில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. (அ-4)

## 30 பேர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களச் சேவையின் கொழும்புச் செய்தியாளர் திரு.எல்மோ பெர்னாண்டோவும் அடங்குகிறார் என மற்றொரு தகவல் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும், அரச தரப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்ற முதல் கட்ட பேச்சுக்களின் போதும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு செய்தியாளர்கள் 22 பேர் இங்கு வந்திருந்தனர் என்பது தெரிந்ததே. [இ-ஐ-4]

## 22 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

முதலாம் வருட மருத்துவபீட மாணவன்
**செல்வன் S. சியாமளன்**

இன்று 22-10-94 இல் 46, சிவன் வீதியில் உள்ள தமது இல்லத்தில் தனது 22 வது பிறந்த தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அவருக்கு எங்கள் வாழ்த்துக்கள்

நண்பர்கள்.

[33467]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும்,
வேலணை கிழக்கு, இரண்டாம் வட்டாரத்தை
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## விருத்தாசலம் இராமச்சந்திரன்

(முன்னாள் இரத்தினபுரி
''சந்திரா ஸ்ரோர்ஸ்'' உரிமையாளர்)

வையத்துள்: 22 — 12 — 1922
தெய்வத்துள் 28 — 10 — 1992

திதி: 22 — 10 — 1994

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டிரண்டு ஆனதையா
ஆறவில்லை எம் நெஞ்சு
ஆறுதல் சொல்ல யாருமில்லாது
தவிக்கின்றோம் – ஐயா!
இவ்வுலகில் உங்களைப் போல்
யார் வருவார் ஐயாவே! ஐயா!

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

104/1, குறுக்கு வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். (33461)

# மரண அறிவித்தல்கள்

## வெற்றிவேலு சங்கரலிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முன்னாள் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளருமான வெற்றிவேலு சங்கரலிங்கம் சென்னையில் காலமானார். தகனக் கிரியைகள் சென்னையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மங்கையர்க்கரசி திலகரத்தினம்
(சகோதரி)

டச் வீதி,
அளவெட்டி. (7676)

## பொன்னையா யோகலிங்கம்

(மண்டைதீவு - 5)

மண்டைதீவைச் சேர்ந்த பொன்னையா யோகலிங்கம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா செல்லம் தம்பதிகளின் மகனும், இலட்சுமியம்மாவின் அன்புக் கணவரும், ஜெயலட்சுமி, வரதலட்சுமி, திருமதி இராசலட்சுமி, காலஞ்சென்ற யோகேஸ்வரன், புஸ்பா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியத்தின் (சந்திரன்) மாமனாரும், கமலவாசுகி, சத்தியா, மீனலோஜனி, கார்த்திகா, கேசவன், ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை 10 மணிக்கு தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. சிவசுப்பிரமணியம்
(மைத்துனர்)

இல. 9, தேவாலய வீதி,
(மத்திய கல்லூரிக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (32466)

## திருமதி துரையப்பா மீனாட்சி

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கந்தரோடையை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமான திருமதி துரையப்பா மீனாட்சி காலமானார். அன்னார் காலம்சென்ற துரையப்பாவின் அன்பு மனைவியும், பரசிவம் பிள்ளையின் [உரிமையாளர் சுதர்சினி வண்ணச்சோலை K. K. S. றோட், யாழ்ப்பாணம்] அன்புத் தாயாரும், செல்வராணியின் அன்பு மாமியும், சிவசுதன், சிவகரன், சிவரூபன், சிவசுதர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தில்லைநாதன், தேவராஜா (ஜேர்மனி), புஸ்பராஜா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று 22 – 10 – 94 சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து. பரமசிவம் பிள்ளை
(மகன்)

கந்தரோடை, சுன்னாகம். (33468)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிற்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அ[illegible] 22—10—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

உ
சிவமயம்

# திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் பவ வருடம் ஐப்பசித் திங்கள் 7-ஆம் நாள் (1994 - 10 - 24)
திங்கட்கிழமை நண்பகல் 12-05 முதல் 1-49 வரையுள்ள
மகர லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது மகன் | எமது மகள் |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| DR. கௌரிகாந்தன் | பிரியதர்சினி |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மட்டக்களப்பு ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும்
திருமண வைபவத்திலும், அதனைத் தொடர்ந்து வில்லியம் ஒல்ற் மண்டபத்தில்
இடம்பெறும் மதிய உணவு விருந்திலும் கலந்து கொண்டு
மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

| | |
|---|---|
| திரு. திருமதி | திரு. திருமதி |
| பொன். தவநாயகம், | செ. அமிர்தலிங்கம், |
| 407/4, திருமலை வீதி, | ''பிரியம்'' |
| மட்டக்களப்பு. | 55, கந்தையா உபாத்தியாயர் வீதி, |
| | கந்தரோடை, சுன்னாகம். |

[சி-9423]


தீபாவளித் திருநாளை முன்னிட்டு

★ விக்னேஷ் ஆடையகம் ★

வழங்கும்

# மாபெரும் மலிவு விற்பனை

இன்று தொடக்கம் தீபாவளித் திருநாள் வரை வேறெவரும்
வழங்க முன்வராத அளவுக்கு நீண்ட கால
மலிவு விற்பனையில்

வாடிக்கையாளர்கள் மற்றும் அன்பர்கள்

அனைவரும் நன்மை அடையும்
அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி
ஆடைகளைத் தெரிவு செய்ய இன்றே நாடுங்கள்!

மாதிரிக்கு விலைப் பட்டியல்

✶ ஆண்களுக்கு உரிய சேட்டிங், சூட்டிங்குகளுக்கான துணிவகைகள்

| சூட்டிங் | | சேட்டிங் | |
|---|---|---|---|
| பழைய விலை | 450/- | பழைய விலை | 320/- |
| கழிவு விலை | 340/- | கழிவு விலை | 275/- |
| றெடிமேட் டவுஸர் | | றெடிமேட் சேட் | |
| பழைய விலை | 625/- | பழைய விலை | 275/- |
| கழிவு விலை | 450/- | கழிவு விலை | 175/- |

★ பெண்களுக்கு உரிய கவுண், ஸ்கேட் பிளவுஸ்

| கவுண் | | ஸ்கேட் பிளவுஸ் | |
|---|---|---|---|
| பழைய விலை | 425/- | பழைய விலை | 500/- |
| கழிவு விலை | 325/- | கழிவு விலை | 400/- |

✶ சிறுபிள்ளைகளுக்கான கவுண்

பழைய விலை275/ கழிவு விலை 175/

# விக்னேஷ் ஆடையகம்

45, லெப். கேணல் சந்தோசம் (கஸ்தூரியார்) தெரு,
(பெரிய கடைச்சந்தி)
யாழ்ப்பாணம். [சி-9523]


# முக்கிய அறிவித்தல்

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

வலிகாமப் பிரிவில் இயங்கும் தானியார் கல்வி நிறுவனங்களின் உதவுதொகை இம்மாதம் மட்டும் 22 ஆம் திகதியிலிருந்து 26 ஆம் திகதி வரை 19, செம்மணி வீதியில் இயங்கும் தனியார் கல்விப்பிரிவில் ஏற்கப்படும் என தனியார் கல்விப் பிரிவு அறிவித்துள்ளது.

தலைவர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்

(சி/9426)

# கண்ணீர் அஞ்சலி

21 – 10 – 94 வெள்ளியன்று சிவபதம் அடைந்த அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபைச் செயலாளர் 'விநாயக பூஜா துரந்தரர்' 'புராணிகர்'

சிவஸ்ரீ. கந்த. சிவபாதசுந்தரக்குருக்கள்

அவர்களின் ஆத்மா சாந்தி அடைய தென்கோவை கற்பகப்பிள்ளையாரை வேண்டுகிறோம். அன்னாரின் பிரிவால் வாடும்,

பா. செல்வரேனக்குருக்கள்
தி. பாஸ்கரமகாராஜாஐயா
(ஆலய உரிமையாளர்கள்,
பரிபாலகர்கள், அர்ச்சகர்கள்).

கற்பகப் பிள்ளையார் கோயில்,
இருபாலை – [illegible] (33470)

## கோமாரியில் மா வருகிறது

யாழ்ப்பாணம், ஓக். 22

இன்று காலை பருத்தித்துறைக்கு 3 ஆயிரத்து 100 மெற்றிக் தொன் மாவுடன் வரும் கோமாரி கப்பலில் இருந்து உடனடியாக மாவை இறக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இறக்கப்படும் மா முன்னுரிமை அடிப்படையில் பேக்கறிகளுக்கு வழங்கப்படும்.

[இ-4]

## ஸ்ரீமாவோ சம்பளம் பெறமாட்டார்

கொழும்பு, ஓக். 22

அமைச்சர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தனது சம்பளப் பணத்தை பொது மக்களின் நன்மைக்காக அன்பளிப்புச் செய்யத் தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-ஐ-4)

காணாமற்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் விசாரித்தபோது இருவரும் இராணுவத்தின் பிடிக்குள் இல்லை என்ற பதிலே கிடைத்தது.

மரணச்சடங்கு நேற்று [illegible] உள்ள அவர்களது இல்லத்தில் நடத்தப்பட்டது.

(இ-15)

# கண்ணீர் அஞ்சலி

21 – 10 – 94 வெள்ளி சிவபதமடைந்த அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை ஸ்தாபகரும் தற்போதைய செயலாளரும் அச் சபையைக் கடந்த 25 ஆண்டுகளாகச் சிறப்பாக வழிநடத்தி வந்தவருமான

கிரியாவித்தகர் ''குருமணி''

சிவஸ்ரீ. கந்த. சிவபாதசுந்தரக் குருக்கள்

அவர்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

[33471] சபை உறுப்பினர்கள்

# நீங்காத நினைவுகளில்..

மலர்வு: 02 — 01 — 1936



உதிர்வு: 22 — 10 — 1992

## திருமதி ராணி பாலசிங்கம்

(மம்மி)

ஒரு மரத்துப் பறவைகள் நாம்
பாசம் மறையாது என்று கூறிவிட்டு
இடையில் எம்மை ஏங்கவிட்டு
பறந்து நீங்கள் சென்றதுமேன்?
வருடங்கள் இரண்டு ஓடி மறைந்தாலும்
மறையாது மம்மி உங்கள் நினைவு.

பேரப்பிள்ளைகள்:
கவிசாந். தமிழன்பன்.
குடும்பத்தினர்.

இல. 3, மருதடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். [33462]

# கண்ணீர் அஞ்சலி



காலஞ்சென்ற
கிரியாவித்தகர் குருமணி
சிவஸ்ரீ கந்த சிவபாதசுந்தரக்குருக்கள்

21-10-1994 வெள்ளியன்று சிவபதம் அடைந்த அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபைச் செயலாளரும், எமது ஆலய பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ கந்த சிவபாதசுந்தரக்குருக்கள் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆலய பரிபாலகர்கள்

அரசடிப்பிள்ளையார் கோயில்,
நாயன்மார்கட்டு,
நல்லூர். (33469)

# மரண அறிவித்தல்

சிவஸ்ரீ
கந்தையா ஐயர் சிவபாதசுந்தரக்குருக்கள்
[கட்டுவன் கணேஸ் ஐயா]

மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளையைச் சேர்ந்த சிவஸ்ரீ கந்தையா ஐயர் சிவபாதசுந்தரக்குருக்கள் 21.10.94 வெள்ளிக்கிழமை திருநெல்வேலியில் காலமானார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், சிவஸ்ரீ திருநீலகண்டக்குருக்கள், சிவஸ்ரீ ஆறுமுகக்குருக்கள், சிவஸ்ரீ அருணாசலக்குருக்கள், சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்கள், சிரஞ்சீவி மகேஸ்வரஐயா, திருமதி லலிதாம்பிகை, செல்வி இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவஸ்ரீ மகாலிங்கசிவஐயா, திருமதிகள் இரத்தினம்மா, மாரிமுத்து. கனகமணி, நகுலேஸ்வரி, ஆகியோரின் அன்பு மாமனாரும்

செல்வன்களான மணிகண்டன், மயூரன், மணிவண்ணன், ஐயப்பதாஸ், முருகதாஸ், சிவதாஸ், செல்விகள் சிவகாமசுந்தரி, சிவதர்ஷினி, சிவரூபி, சுபாசினி, சிவகௌரி, சுமேதா, சுகந்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் 22.10.94 இன்று சனிக்கிழமை அன்னாரது திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவஸ்ரீ. சி. ஆறுமுகக்குருக்கள்
[மகன்]
யாழகம்

திருமதி Dr. S. இரஜேஸ்வரன்
[வைத்தியசாலை அருகில்,
பலாலி வீதி, திருநெல்வேலி. [33463]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org